# இரண்டு வார்த்தை

உபாசகர்களுக்கு வேண்டியும், பக்தர்களுக்கு வேண்டியும், ஸ்ரீ புவனேஸ்வரி மந்த்ரம் புத்தக வடிவில் பல தெய்வீக வெளியீடுகளைக் கொடுத்து வருவது அனைவரும் அறிந்ததே.

இப்புத்தக உதயம் ஒருநாள் ஸ்ரீஸ்வாமிகள் ஸ்ரீசுப்ரமண்ய ஆவரண பூஜை செய்யும்போது தான். தேவி சம்பந்தப்பட்ட புஸ்தகம் வெளிவரும்போது சுப்ரமண்ய பூஜா புத்தகமும் வரவேண்டுமென்பது அந்த சுப்ரமண்ய சுவாமியின் திருவுள்ளமே.

ராமாயணத்தில் முருகன், பாரதத்தில் ஸ்ரீ முருகன், வேலாயுதத்திற்கு மேலாயுதமில்லை என்பன போன்ற கட்டுரைகள் முருகனது பெருமையையும், அற்புதங்களையும் விளக்குகின்றன.

திருவெண்காடு கவி ந்யாஸ மீமாம்ஸ சிரோன்மணி பிரும்மஸ்ரீ முத்துசாமி சாஸ்திரிகள் அவர்கள் இப்புத்தகத்திற்கு உரிய விஷயங்களைத் தந்துள்ளார்கள். அவர்களுக்கு நமது நன்றியைத் தெரிவிப்பதில் பெருமையடைகிறோம்.

ஆவரண பூஜை விபரமும், ஷண்முக ஸஹஸ்ர நாமங்கள் ஆறும், பக்தர்களுக்குப் பெருமளவில் உபயோகமாய் இருக்கும் என நம்புகிறோம்.

இப்புத்தகத்திற்கு பிளாக் செய்து கொடுத்த ராயன் சி கோ-விற்கும், அழகுற அச்சிட்டுக் கொடுத்த கண்ணப்பா ஆர்ட் பிரிண்டர்ஸ் அவர்களுக்கும், ஸ்ரீ முருகனின் அருள் முன்நிற்கும்.

இப்புத்தகம் முருக பக்தர்களது கர கமலங்களில் இருந்து, முருகனுடைய பாத கமலங்களைச் சிந்திக்க உதவ வேணுமாய் வேண்டுகிறேன்.

ராமகிருஷ்ண பரத்வாஜ்

ஸ்ரீ புவனேஸ்வரி மந்த்ரம்